**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக

என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு

செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை மாத்திரம் அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| நிறுவகத்தினால் பேணப்பட்டு வருகின்ற இரு வங்கிக் கணக்குகளுக்கான காசுப் புத்தகங்களைப் பேணுதல், காசோலைகள் எழுதுதல் மற்றும் வழங்குதல், மாதாந்த கணக்குப் பொழிப்பு தயாரித்தல் மற்றும் காசோலைகளின் திகதியை நீடித்தல், கோவைகளைப் பராமரித்தல் போன்ற அனைத்து செயற்பாடுகளும் நிறுவகத்தின் நிதிப் பிரிவின் ஒரு அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்டிருநுததுடன் உள்ளகப் பரிசோதனைக்கு உட்படும் வகையில் வேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் கணக்கு இலக்கம் 143-1001-0-3298037 மற்றும் 143-100123298038 ஆக 02 நடைமுறைக் கணக்குகள் பேணப்பட்டு வருகின்றன. இந்த 02 கணக்குகளுக்கும் ஒரு முகாமைத்துவ உதவியாளர் இவ்வளவு காலமும் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தார். தற்போது நிறுவகத்தின் கணக்காளர் மற்றும் நிதியியல் அதிகாரி ஆகிய 02 பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன. 2021 மே 28 வர்த்தமானி அறிவிப்பின் மூலம் இந்த 02 பதவிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. Covid 19 தொற்றுநோய் காரணமாக நிறுவகம் மூடப்பட்டிருந்தமை மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு முடிந்தவுடன் இந்தப் பிழை சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை முறையாகச் செயற்படுத்தப் படல் வேண்டும். |

## 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் மூலதனச் செயற்பாடுகளில் உருவான காசுப்பாய்ச்சல் நிதிச் செயற்பாடுகளில் பெறப்பட்ட காசுப் பாய்ச்சலின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் ரூபா 8,309,475 ஆன மூலதன மானியங்கள் செயற்பாட்டு நடவடிக்கைகளில் காட்டப்பட்டிருந்தது. | இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள காசுப் பாய்ச்சலில் இது திருத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | காசுப்பாய்ச்சலுக்கு உரித்தற்ற முன்னைய வருட சீராக்கமான ரூபா 172,239 ஆனது இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இற்கு முரணாக செயற்பாட்டு இலாபத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தது. | 2020 வருடாந்த நிதிக் கூற்றுக்களில்உள்ளடக்கப்பட்டுள்ள உரிமைகள் மாற்றங்கள் கூற்றில் திரண்ட நிதியத்தின் கீழ் முன்னைய வருடத்திற்கான சீராக்கமாக ரூபா 172,239 சரியாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் தாமத வழுவொன்றினால் அந்த எண்ணிக்கை காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு இலாபத்திற்கு சீராக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிதி நிலைமைக் கூற்றில் கற்பனைச் சொத்துக்களாக காட்டப்பட்டுள்ள ரூபா 2,037,760 ஆன கற்கைநெறிகளைக் கற்கும் மாணவர்களின் தகவல்களை உள்ளடக்குவதற்கு நிறுவப்பட்ட தகவல் முறைமை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் பிரகாரம் பெறுமானத் தேய்விடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 2,037,760 ஆன கிரயமொன்று செலவிடப்பட்டு நிறுவப்பட்ட மாணவர்களின் தகவல் முறைமை 2020 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்ட போதிலும், செயற்படுத்தப்பட்ட போது கண்டுபிடிக்கப்பட்ட தவறுகள் திருத்தங்கள் கணனி மென்பொருளினால் வழங்கப்பட்ட நிகழ்ச்சித் | குறிப்பிட்ட கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திட்டவாளர்களினால் வருடத்தில் செய்யப்பட்டிருந்தன. மேலும் மேற்பட்ட கிரயத்தில் ரூபா 224,000 ஆன தொகையொன்று முறைமையானது சரியான முறையில் செயற்படும் வரையில் தக்க வைக்கப்பட்டுள்ளது. தக்க வைக்கப்பட்ட பணம் விடுவிக்கப்பட்டதன் பின்னர் கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க நூற்றுக்கு 25 வீதம் வருடாந்தம் தேய்மானமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவகத்தினால் பேணப்பட்டு வருகின்ற வங்கிக் கணக்கிற்கான வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் இனங்காணப்படாத வருமானம் ரூபா 3,308,461 ஆகும். அது முறையே 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான ரூபா 1,374,832 மற்றும் ரூபா 1,933,629 என்பதுடன் இவ் வருமானம் இனங்காணப்பட்டு கணக்கில் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கற்கை நெறிகளுக்காக மாணவர்களினால் நேரடியாகப் பணம் வங்கியிலிடப்பட்டமைக்கான பற்றுச்சீட்டுக்கள் நிறுவகத்திற்கு பெறப்படாத காரணத்தினால் இப்பணம் இனங்காணப்படுவதில் தாமதம் ஏற்பட்டது. இதற்காக நிறுவகத்தினால் புதிய பணம் செலுத்தும் உறுதிச்சீட்டுக்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் பதிவாளர் பிரிவினால் புதிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இந்நிலைமை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் 2019 மற்றும் 2020 வைப்புக்களில் கணிசமான அளவு தற்போது இனங்காணப்பட்டு சரியாக கணக்கில் எடுக்கப்பட்டுள்ளது. | வருடத்தின் வருமானம் முறையாக இனங்காணப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் ரூபா 31,590,165 மூலதன மானியங்களுக்கு காலக் கழிவுகள் செய்யப்படாதிருந்ததுடன் மூலதன மானியங்களுக்கான காலக்கழிவு கணக்கிடப்படுவதற்கான கணக்கீட்டுக் கொள்கையொன்று நிறுவகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டு குறிப்புக்களின் மூலம் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | மூலதன மானியங்களுக்கு உரிய காலக்கழிவுக் கணக்கில் எடுக்கப்படுவதற்கான கணக்கீட்டுக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு 2021 ஆம் வருடத்தில் கணக்குகள் தயாரிக்கப்படும் போது காலக்கழிவுகளை கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட கணக்கீட்டு கொள்கை நிறுவப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

---

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(ஆ) | இடைக்காலக் கட்டுநிதி ஒன்றைப் பெற்றமைக்கான பணிகள் முடிவடைந்தவுடன் அச்செலவுகள் தாமதமின்றி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தினால் 25 சந்தர்ப்பங்களில் பெறப்பட்டிருந்த ரூபா 315,420 ஆன முற்பணத் தொகை தீர்க்கப்படுவதற்கு 01 மாதத்திலிருந்து 06 மாதங்கள் வரையான கால வீச்சொன்று எடுக்கப்பட்டிருந்தது. | இம்முற்பணம் தீர்க்கப்படுவதற்குத் தாமதமேற்பட்ட காரணம் Covid 19 சுகாதாரப் பேரழிவுகளின் காரணமாக சில மாதங்கள் அலுவலகம் மூடப்பட்டிருந்ததால் மற்றும் குறித்த ஊழியர்கள் தொலைதூரப் பகுதிகளில் வசிப்பவர்கள் என்பதனால் அவர்களுக்கு வேலைக்கு சமூகமளிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டன. தற்போது இந்நிலைமையைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மையினால் குறிப்பிட்ட முற்பணங்கள் தீர்ப்பதானது முறையாக செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,141,022 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 5,626,205 ஆகும். நிதி விளைவுகளில் ரூபா 18,767,227 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு நிர்வாக மற்றும் மாற்றீட்டுச் செலவுகள் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தின் செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் ரன்ன, குருநாகல், மாத்தறை மற்றும் இரத்தினபுரிப் பிரதேச பயிற்சி மத்திய நிலையங்களில் 2018/2019 மற்றும் 2019/2020 ஆம் வருடங்களுக்காக மதியுரை தொடர்பான டிப்ளோமா கற்கை நெறிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அக்கற்கைநெறிகள் நடாத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதற்கான காரணம் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ரன்ன பிரதேச பயிற்சி மத்திய நிலையத்தின் 2018/2021 காலப்பகுதியில் அக்கற்கைநெறிகளை தொடங்குவதற்கு போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காத காரணத்தினால் இக்கற்கை நெறியை தொடங்குவதற்கு முடியவில்லை. எனினும் 2021 ஆம் ஆண்டிலிருந்து மதியுரை டிப்ளோமா கற்கை நெறியை நடாத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு 40 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் நேர்முகப் பரீட்சை 2021 மார்ச் 25 இல் நடாத்தப்பட்டதுடன் 22 மாணவர்கள் பங்குபற்றி இருந்தனர். மிகுதி மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு | எதிர்பார்க்கப் பட்ட இலக்குகளை நிறைவேற்று வதற்கு செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சமூகமளிக்காமை Covid 19 தொற்று நிலைமையினால் ஆகும். எனவே, எதிர்காலத்தில் மற்ற மாணவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு கற்கை நெறிகள் தொடங்கப்படும். | |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 102 என்பதுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை 36 வெற்றிடங்கள் அதாவது நூற்றுக்கு 35 வீதமாகும் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி 2018 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அப்பதவி பதில் அடிப்படையில் மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் (கற்கை) மேற்கொள்ளப்படுகின்றது. | நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக ஆட்சேர்த்தல் அமைச்சினால் மேற்கொள்ளப்படும். அதன் பிரகாரம் பணிப்பாளர் நாயகத்தின் ஆட்சேர்ப்புத் திட்டம் திருத்தப்படுவதற்கு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அது அங்கீகரிக்கப்பட்டவுடன் ஆட்சேர்ப்பானது அமைச்சின் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படும்.<br><br>நிறுவகத்தின் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதற்கு 2019 செப்டம்பர் 12 ஆந் திகதிய அரசின் வர்த்தமானி அறிவிப்பின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தும் திறைசேரிச் செயலாளரின் 2019/11/20 மற்றும் Dms/Policy/Recruitment ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன் ஆட்சேர்ப்பதற்கு முடியாது போனது. அத்துடன் 2020 மே நிர்வாக சபையினால் நிறுவகத்தின் ஆட்சேர்ப்புத் | விரைவில் குறிப்பிட்ட ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திட்டம் மீண்டும் திருத்தப்பட்டு அனைத்து ஆட்சேர்ப்புக்களையும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆட்சேர்ப்புத் திட்டம் திருத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் நிறுவகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2021 மே 28 வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டது. எதிர்காலத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |

**3.3 வாகன முறைமை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்திற்கு உரித்தான கெப் வாகனமொன்று 2019 ஆகஸ்ட் மாதத்தில் திருத்த நடவடிக்கைகளுக்காக குறிப்பிட்ட முகவர் நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இத் திருத்த நடவடிக்கைகளுக்காக 2020 ஆகஸ்ட் மாதம் ரூபா 162,977 குறித்த முகவர் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த கெப் வாகன நிறுவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை. 2021 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் இவ்வாகனம் ஓட்டுவதற்கு முடியாதிருந்தமை குறிப்பிடப்பட்டு ஏலத்தில் விடுவதற்கு அமைச்சின் அனுமதி கோரப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் வாகனம்திருத்தப்படுவதற்கு ஒப்படைக்கப்பட்ட போது அதன் நிலைமை அவதானிக்கப்படுவதற்கு தவறியிருந்தமையால் திருத்தங்களுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகையும் விளைவற்ற | இவ்வாகனம் 2019 இல் வாயுச்சீராக்கி முறைமைமற்றும் டேஸ்போர்ட் திருத்தங்களுக்காக வாகன முகவர் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 162,577 செலுத்தப்பட்டிருந்தது. இச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வாகனத்தை ஏற்றிச்செல்லும் போது இதன் இயந்திரம் தொடர்பான குறைபாடொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதால் மீண்டும் வாகனத்தின் இயந்திரத்தை பழுது பார்ப்பதற்கான முகவர் நிறுவனத்திடம் அனுப்பப்பட்டு மதிப்பீடொன்று பெறப்பட்டு | வாகன முறைமை முறையாக நிர்வகிக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| செலவொன்றாகும். | நிர்வாகச்சபைக்கு பத்திர இலக்கம் 2019 ஒக்தோபர் 22 இன் மூலம் சமர்ப்பிக்கப்படும் அது அங்கீகரிக்கப்படவில்லை என்பதுடன் வாகனத்தை ஏலத்தில் விடுமாறு நிர்வாக சபை அறிவுறுத்தியிருந்தது.<br><br>அதன் பிரகாரம் அமைச்சின் வாகன நீக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட போது இவ்வாகனத்தையும் நீக்குமாறு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சின் மூலம் அது தொடர்பாக தொழில்நுட்ப அதிகாரியின் அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளது. 2021 யூலை 29 ஆந் திகதி வாகனத்தின் கோவைகள் தொழில்நுட்ப அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |